TAMIL NADU LEGISLATURE LIBRARY
1 - OCT 1971
MADRAS

தமிழ் நாடு சட்டப் பேரவை.

வியாழக்கிழமை, 1970 செப்டம்பர் 3.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. நீத்தார் நினைவுக் குறிப்பு.

முன்னாள் உறுப்பினர் திரு. சி. கோதண்டராம பாகவதர் அவர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1962-லிருந்து 1967-ஆம் ஆண்டுவரை ஆரணி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாடு சட்டப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. சி. கோதண்டராம பாகவதர் அவர்கள் 2—9—1970-ம் நாளன்று மறைந்ததைக் குறித்து இப்பேரவையின் இரங்கலையும், ஆழ்ந்த வருத்தத்தையும், அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு நான் தெரிவிக்கிறேன்.

மறைந்தவருக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நின்றனர்.

2. வினாக்கள்—விடைகள்.

(வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்)

வித்துவான் பட்டத்திற்குப் பதில் புலவர் பட்டம்.

* 210 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை சர்வகலாசாலையில் தற்போது வழங்கப்பட்டு வரும் வித்துவான் பட்டத்திற்கு பதிலாக புலவர் பட்டம் வழங்க சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு இம்மாநில அரசு பரிந்துரை செய்துள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: ஆம்.

(வினா எண் 210 விடையளிக்கப்பட்டது.)

திரு. கே. விநாயகம்: தலைவர் அவர்களே, 'வித்வான்' என்ற சொல்லுக்கும் 'புலவர்' என்ற சொல்லுக்கும் அடிப்படையில் என்ன வித்தியாசம் இருக்கிறது? 'வித்வான்' என்ற சொல் வடமொழிச் சொல்லாகவும், 'புலவர்' என்ற சொல் தமிழ் சொல்லாகவும் இருக்கின்றன என்பதைத் தவிர, தகுதியில் வித்தியாசம் இருக்கிறதா?